அடுத்த ஆண்டு முதல் இந்த உதவியை நிறுத்திவிட இருப்பதனுல். நாமே அந்தத் தொகை பூராவையும் ஒதுக்கிச் செலவிட ஏற்படுகிற போது இதுபற்றி பரிசீலிக்க முடியும். இப்போது முடியாது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

* 470 வினு—திரு. நா. வெ. குருசாமி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மதுரை மாவட்டம், ஆண்டிப்பட்டி ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்பொழுது ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இதுவும் அதேபோன்ற கேள்விதான். ஆண்டிபட்டி ஊராட்சி ஒன்றியத்தைப் பிரிப்பதற்கு இப்போது முடியாது.

திரு. நா. வெ. குருசாமி : இந்த ஒன்றியத்தில் மலைப்பகுதி அதிகமாக இருக்கிறது. ஊராட்சித் தலைவர்கள் இன்றைக்கு சென்றால் நாளைக்கு அங்கே போய்ச்சேரக்கூடிய அவலநிலைதான் இருக்கிறது. ஆகவே, அதை உடனடியாக இரண்டாகப் பிரிக்க நடவடிக்கை எடுத்துக்கொள்வார்களா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : நானும் இன்று போய் நாளை வா என்று சொல்ல விரும்பவில்லை, அது உரியகாலத்தில் பரிசீலிக்கப்படும்.

தரங்கம்பாடியை நகராட்சியாக்கல்

* 471 வினு—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மாயூரம் தாலுகா தரங்கம்பாடி பேரூராட்சியினை நகராட்சியாக மாற்றும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இல்லை.